செ.வெ.எண்: 26 நாள்: 12.08.2021

# நாகப்பட்டினம் மாவட்டம் சிகார் கிராமத்தில் அமைந்துள்ள மீன்வளர்ப்பு மற்றும் மீன்குஞ்சு உற்பத்தி பண்ணையினை, மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அ..அருண்தம்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.

நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளுர் வட்டம் சிகார் கிராமத்தில் அமைந்துள்ள மீன்வளர்ப்பு மற்றும் சந்தைபடுத்துதல் மீன்குஞ்சு உற்பத்தி பண்ணையினை, மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அ..அருண்தம்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.

மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது:

மீன்வளம் மற்றும் மீனவர்களின் நலனை மேம்பாடுத்திட தமிழக அரசு பல்வேறு முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. மீன்வளம் மக்களுக்கு தேவையான புரதச்சத்து மிகுந்த உணவு வழங்குவதிலும் மற்றும் ஊரக பகுதியில் வேலைவாய்ப்பினை உறுதி செய்வதிலும் முக்கிய பங்கு வகுக்கின்றது. இந்நிலையில் மீன்பண்ணையில் மீன்குஞ்சு உற்பத்தி, மீன்குஞ்சு வளர்த்தெடுப்பது, மீன்வளர்ப்பு மற்றும் சந்தைபடுத்துதல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த மீன்பண்ணையில் தமிழ்நாடு அரசு மீன்வளத்துறையின் வாயிலாக பயிற்சி மேற்கொண்டு மீன்பண்ணை மற்றும் மீன்குஞ்சு உற்பத்தி மையம் அமைக்கப்பட்டு வளர்த்தெடுக்கும் பணி நடைபெறுகிறது. மேலும் இம்மீன்பண்ணையில் சிக்கல் வேளாண் அறிவியல் நிலையம் மூலம் மீன்வளர்ப்பு விவசாயிகளுக்கு பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் மீன்குஞ்சு வளர்ப்புக்கு ஆண்டுக்கு ஐந்து முதல் ஆறு இலட்சம் வரை இலாபம் கிடைக்கும். மேலும் உள்நாட்டு மீன்வளர்ப்பினை மேம்படுத்த நாகப்பட்டினம் மாவட்டத்தில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது

மாவட்டத்தில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தில் மீன்வளர்ப்பில் மீன் மற்றும் மீன்குஞ்சுகள் பண்ணை அமைத்து வளர்க்க மானிய உதவிகள் பெற ஆர்வமுள்ள பயனாளிகள் ஒரு ஹெக்டேர் பரப்பில் ரூ.7.00 இலட்சம் செலவு செய்து மீன்வளர்ப்பு குளம் அமைத்திட 50சதவீதம் மானியமாக ரூ.3.50 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது. மேலும் உள்ளீட்டு மானியமாக (மீன்குஞ்சு, தீவனம் மற்றும் இதர செலவுகள்) ஹெக்டேர் ஒன்றுக்கு ஆகும் மொத்த செலவினமான ரூ.1.50 இலட்சத்தில் 40சதவீதம் மானியமாக ரூ.60,000/- வரை வழங்கப்படுகிறது.

அதே போன்று ஒரு ஹெக்டேர் பரப்பில் ரூ.6.00 இலட்சம் செலவு செய்து மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணை அமைக்க ஆகும் செலவினத்தில் 50 சதவீதம் மானியமாக ரூ.3.00

இலட்சம் வரை வழங்கப்படுகிறது மற்றும் உள்ளீட்டு மானியத்திற்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ஆகும் மொத்த செலவினமான ரூ.1.50 இலட்சத்தில் 40 சதவீதம் மானியமாக ரூ.60,000/- வரை வழங்கப்படுகிறது. எனவே விருப்பமுள்ளவர்கள் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் இயங்கும் நாகப்பட்டினம் (தெற்கு) மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு விண்ணப்பம் பெற்று பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார். ஆய்வின்போது மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் திரு.கோ.ஜெயராஜ், திரு.காளிதாசன் மற்றும் மீன்வளர்ப்பு விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**